# "பவுலே, உங்களால் எப்படி முடிந்தது?" [21:17-26]

*பவுல் எருசலேமுக்குச் சென்றபோது, இடர்ப்பாட்டை எதிர்நோக்கியே சென்றார் (ரோமர் 15:30, 31; அப். 20:22, 23). யூதக் கிறிஸ்தவர்களின் கௌரவமானது புறஜாதிக் கிறிஸ்தவர் களிடத்திலிருந்து நன்கொடையை ஏற்க அவர்களை அனுமதிக் காத சாத்தியக்கூறுக்குத் தயாராகவே அவர் சென்றார். தம்மை, காட்டிக் கொடுப்பவன் என்று நினைத்த தமது முன்னாள் துணையாளர்களிடமிருந்து தாம் துன்புறுத்தலை எதிர்பார்க்கு மாறு இருக்கும் என்று அவர் அறிந்தார். அவர் கைது செய்யப் படுவார் என்று ஆவியானவர் அவருக்குக் கூறியிருந்தார். எருசலேமின் தெருக்களில் அவர் நடந்து சென்றபோது, இடர்ப் பாடு எங்கிருந்து வரலாம் என்று அவர் தம் தோள்களுக்கு மேலாகப் பார்த்துக் கொண்டே சென்றிருக்க வேண்டும். பிறகு அவர் மூப்பர்களின் கூட்டமொன்றிற்குச் சென்றார், அங்கு அவர் பாதுகாப்பாக உணர்ந்தார் - ஆனால் அங்குதான் இருந்தது!*

> *... அவர்கள் அவனை நோக்கி: சகோதரனே, யூதர்களுக்குள் அநேகமாயிரம்பேர் விசுவாசிகளாயிருக் கிறதைப் பார்க்கிறீரே, அவர்களெல்லாரும் நியாயப் பிரமாணத்துக்காக வைராக்கியமுள்ளவர்களாயிருக் கிறார்கள். புறஜாதிகளிடத்திலிருக்கிற யூதரெல்லாரும் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணவும், முறைமைகளின்படி நடக்கவும் வேண்டுவதில்லை யென்று நீர் சொல்லி, இவ்விதமாய் அவர்கள் மோசேயை விட்டுப் பிரிந்து போகும்படி போதிக்கிறீரென்று இவர்கள் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது செய்யவேண்டியது என்ன? நீர் வந்திருக் கிறீரென்று இவர்கள் கேள்விப்பட்டு, நிச்சயமாகக் கூட்டங்கூடுவார்கள். ஆகையால் நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்ய வேண்டும்; அதென்ன*

*வென்றால், பிரார்த்தனை பண்ணிக் கொண்டவர் களாகிய நாலுபேர் எங்களிடத்தில் இருக்கிறார்கள். அவர்களை நீர் சேர்த்துக்கொண்டு, அவர்களுடனே கூடச் சுத்திகரிப்புச் செய்து கொண்டு, அவர்கள் தலைச்சவரம் பண்ணிக் கொள்வதற்குச் செல்லுமானதைச் செலவு செய்யும்; அப்படிச் செய்தால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்ட காரியங்கள் அபத்தமென்றும், நீரும் நியாயப்பிரமாணத்தைக் கைக் கொண்டு நடக்கிறவ ரென்றும் எல்லாரும் அறிந்து கொள்வார்கள் (21:20-24).*

*அவர்களின் அசாதாரணமான கட்டளைக்கு அப்போஸ் தலர் இணங்கி நடந்தது நம்மைத் திகைக்க வைக்கின்றது: "அப்பொழுது பவுல் அந்த மனுஷரைச் சேர்த்துக் கொண்டு, மறுநாளிலே அவர்களுடனே கூடத் தானும் சுத்திகரிப்புச் செய்துகொண்டு, தேவாலயத்திலே பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காகவும் வேண்டிய பலிசெலுத்தித் தீருமளவும் சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான்'' (வ. 26). அந்தப் பலிகளில் பாவநிவாரணப் பலியும் அடங்கும் என்று அறிந்த நாம், "பவுலே, இது ஏன்?" என்று அலறுகின்றோம்.*

*வினாக்கள் நமது சிந்தைகளில் நிறைகின்றன: பவுல் செய்தது சரியா தவறா? இன்றைய நாட்களில் பலிகள் செலுத்துவது, அதுவும் சிறப்பாக, நாம் யூதர்களாயிருந்து பலி செலுத்துவது சரியானதா? இந்தக் கேள்விகளையே நாம் இப்பாடத்தில் இறுகப் பற்றிக் கொள்வோம்.*

## மனிதரின் முரண்பாடான வார்த்தைகள்

*முதலில் நாம், ''பவுல், மூப்பர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கியதில் சரியானதைச் செய்தாரா?" என்ற வினாவுடன் நாம் தொடங்குவோம். மதிப்பிற்குரிய கிறிஸ்தவக் கல்வியாளர் களிடம்கூட இந்த விஷயத்தில் மனச்சான்றுள்ள கருத்து நிலவு வதில்லை. நமது பாடத்தின் நோக்கங்களுக்காகப் பல வகை யான கண்ணோட்டத்தின் கருத்துக்களை மனப்போக்கின்*

*படியாக நான் நான்கு தலைப்புக்களில் குழுவாகப் பிரித்துள்ளேன்:*

***தகுதியற்ற ஒரு "ஆம்!"***

*இந்தக் கேள்விக்கு ஒரு சிலர், தகுதியற்ற வகையில் "ஆம்!" என்று பதில் கொடுக்கின்றார்கள். பவுலும், மூப்பர்களும் அவர்கள் செய்த யாவற்றிலும் முற்றிலும் சரியானவர்களாகவே இருந்தார்கள் என்று அவர்கள் நம்புகின்றார்கள், அதாவது அவர்களின் அணுகுமுறையானது எங்கும் எப்பொழுதும் சரியானதாகவே இருக்கும், மற்றும் அவர்கள் இதற்காகப் பாராட்டப்படவும் உயர்த்தப்படவும் வேண்டும் என்கின் றார்கள். இந்தக் குழுவானது, பவுல், "... எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" (1 கொரி. 9:22ஆ) என்று கூறியபோது எதை அர்த்தப் படுத்தினார் என்பது தலைசிறந்த எடுத்துக்காட்டாகவும், ரோமர் 14ல் பலவீனமான சகோதரரைத் தாங்கும்படியான பவுலின் போதனைக்கு முழுமையான ஒரு விளக்கமாகவும் இருந்தது என்று சுட்டிக்காட்டுகின்றார்கள்.*

*பவுலும் மூப்பர்களும் அவர்கள் செய்த யாவற்றிலும் சரியாகவே இருந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக, லூக்கா அவர்களின் செயல்பாட்டை எவ்விடத்திலும் கண்டனம் பண்ணவில்லையென்றும், பவுலின் மனச்சான்றானது இந்த நிகழ்ச்சியில் அவரது பங்கைப் பொறுத்தமட்டில் சுத்தமுள்ள தாய் இருந்தது (23:1) என்றும் முதல் குழு குறிப்பிடுகின்றது. இந்தக் குழுவானது, மக்களுடன் ஒத்துப்போவதைப் பவுலின் செயல்பாடு அடிக்கோடிட்டு முக்கியத்துவப்படுத்துகின்றது என்று நம்புவதுடன், உபதேச நிலையைத் தற்காப்பது என்பதை விட சமாதானத்தை வளரச் செய்வது முக்கியமானது என்று கூடப் போதிக்கின்றது.*

*இந்த நிலைப்பாட்டின் சில அம்சங்களை நான் ஏற்றுக் கொள்ள முடியும், ஆனால் எல்லாவற்றையும் அல்ல. குற்றம் சாட்டப்படுதலைத் தவிர்க்க முயற்சித்தல் பற்றி சிலவற்றை நாம் இந்த விபரத்திலிருந்து கற்றுக் கொள்ளக் கூடும், ஆனால் மூப்பர்களும் மற்றும் பவுலும் செய்த ஒவ்வொன்றிற்காகவும் அவர்களைப் பாராட்டுவது என்பது நெருங்கிய தொடர்பில்லா ததாகக் காணப்படுகின்றது.*

*‘‘எல்லாருக்கும் எல்லாமும் ஆகுதல்’’ என்ற பவுலின் கொள்கையானது அவிசுவாசிகளை ஆதாயப்படுத்திக் கொள்ளுவதற்காக வடிவமைக்கப்பட்டதாகும், அது விசுவாசி களைச் சாந்தப்படுத்தவதற்கானதல்ல. எருசலேமில் இருந்த அவிசுவாசிகளைப் பொறுத்தமட்டில் கூட, ஆலய சடங்குகளில் பவுல் பங்கேற்ற நிகழ்ச்சியானது பிரபலமாகும் போட்டிகளில் அவரை வெற்றி பெறச் செய்வதாகவோ, அல்லது யூதர்களுக்குப் பிரசங்கிப்பதைச் சுலபமாக்குவதாகவோ இருக்கவில்லை (9:29; 22:17-21ஐக் காணவும்).*

*ரோமர் 14ம் அதிகாரமானது மாறுபட்ட முறைமையுடைய பழக்கங்களைக் குறிப்பிடுகின்றது. நியாயப்பிரமாணத்தினால் கட்டளையிடப்பட்ட சில விஷயங்கள் (ஏழாம் நாளில் ஓய்வெடுத்தல், போஜனம் பண்ணுதல் பற்றிய பிரமாணங்கள் முதலியவை) குறிப்பிடக்கூடியவையல்லாதவைகளாக, புதிய ஏற்பாட்டின் போதனையைப் பாதிக்காதவைகளாக இருந்தன, ஆனால், பாவநிவாரணப் பலி செலுத்துதல் என்பது “மாறு பாட்டின் விஷயம்” என்று இலேசாகத் தள்ளி விட முடியுமா என்று காண்பது மிகவும் கடினமாயிருக்கின்றது.*

*மூப்பர்களும் பவுலும் தவறான எதையும் செய்யவில்லை என்பதற்கு இந்தக் குழுவினர் தரும் ஆதாரம் எதுவும் ஏற்றுக் கொள்வதற்குக் குறைவானதாகவே இருக்கின்றது. வேதாகம எழுத்தாளர்கள் எவரும் ஒருபொழுதும் பாராட்டவோ அல்லது கண்டனம் பண்ணச் சற்று நின்று நிதானிப்பதில்லை; ஆதியாகமத்தில் நோவா குடித்து வெறித்திருந்த செய்தியை மோசே நடத்திய விதத்தைக் கவனியுங்கள் (ஆதி. 9:20, 21). பவுல் தமது மனச்சான்றை மீறி நடந்ததில்லை என்று குறிப்பிடுவது உண்மையே, ஆனாலும் அந்தக் கூற்றானது, அவர் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்திய காலகட்டத்தை யும் உள்ளடக்கியது (அப். 8:1, 3). மூப்பர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தபோது தாம் வேண்டுமென்றே தவறு செய்ய வில்லை என்பதைப் பவுலின் வார்த்தைகள் நிரூபிக்கின்றன; அவரது நடக்கையானது கேள்வியெழுப்ப முடியாதது என்று அது நிரூபிப்பதில்லை.*

*தேவனுக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் மனிதர்களுடன் ஒத்துப்போவது முக்கியமானது என்று போதிப்பவர்கள் மிகவும் தூரமாய் விலகிச் செல்லுகின்றார்கள். இதை யாக்கோபுவே*

*பின்னாளில் (ஒழுக்க ரீதியான அல்லது உபதேச ரீதியான) சுத்தம் என்பது சமாதானத்தை விட முக்கியமானது என்று வலியுறுத்தினார் (யாக். 3:17).*

### *தகுதியுள்ள ஒரு "ஆம்"*

*இரண்டாவது குழுவொன்று - ஒருவேளை இது பெரிய குழுவாயிருக்கலாம் - தங்களின் "ஆம்" என்பதை, "பவுல் சூழ் நிலைகளின் கீழ் சரியானதைச் செய்தார்" என்று கூறுவதினால் தகுதிப்படுத்துகின்றனர். இவர்கள் கட்டுப்படுத்தும் சூழ்நிலை கள் எல்லாவற்றையும் ஒப்புக்கொள்ளுவதில்லை, ஆனால் சூழ்நிலையின் வெளிச்சத்தில் பவுல் தம்மால் முடிந்த அளவு சிறந்ததைச் செய்தார் என்று நம்புகின்றனர். பெரும்பாலும் அட்டவணைப் படுத்தும் சூழ்நிலைகளில் சில ஏற்கனவே விவாதிக்கப்பட்டிருக்கின்றன: பவுலின் மீதும் மூப்பர்களின் மீதும் சபைக்குள்ளும் சபைக்குப் புறம்பேயிருந்தும் தரப்பட்ட நம்புதற்குரிய அழுத்தங்கள், "எல்லாருக்கும் எல்லாமுமாகும்" பவுலின் தீர்மானம் முதலியன. பின்வரும் மூன்று சூழ்நிலை களும் கூட அடிக்கடி வலியுறுத்தப்படுகின்றன:*

*(1) யூதத்துவத்தின் தனித்தன்மைகள். புதிய உடன்படிக்கை யில், குடியுரிமை அதிகாரமுடைமைக்கும், மத அதிகார முடைமைக்கும் இடையில் ஒரு வேறுபாடு ஏற்படுத்தப் பட்டுள்ளது: நாம், "இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும்" செலுத்த வேண்டும் (மத். 22:21ஆ; 1 பேது. 2:17யும் காணவும்). நாம், நாட்டின் சட்டங் களுக்கு அவைகள் தேவனுடைய சட்டங்களை மீறாதவைகளா யிருக்கும் வரையில், கீழ்ப்படிய வேண்டும் (ரோமர் 13:1-7; அப். 5:29).[1] இதற்கு எதிரிடையாக, பழைய உடன்படிக்கை யின் கீழ், குடியுரிமை அதிகாரமுடைமையும், மத அதிகார முடைமையும் ஒன்று கலந்திருந்தன. மோசேயின் பிரமாண மானது மத சட்டங்களையும் குடியுரிமைச் சட்டங்களையும் இணைத்திருந்தது. இஸ்ரவேலர்களுக்கான சட்டங்கள் அவர்களின் மத செயல்பாடுகளை மட்டுமின்றி, ஒரு நாடு (இனம்) என்ற வகையில் அவர்களின் எல்லாச் செயல்களையும் கட்டுப்படுத்தியது. ஆகையால், முன்பே குறிப்பிட்டபடி, பெரும்பாலான யூதர்கள் தங்களது மதம் மற்றும் இனம் ஆகியவற்றைப் பிரித்தறிவதில் மிகவும் இடர்ப்பாடு*

அடைந்திருந்தார்கள். பெரும்பாலான யூதர்கள், பலி செலுத்து வதைத் தங்கள் நாட்டுப் பாராம்பரியமாக குறைந்த பட்சம் கி.பி. 70ல் தேவாலயமானது அழிக்கப்படும் வரையிலாவது - கண்ணோக்கியிருந்தார்கள். இந்தக் காரணியானது அடுத்து வருவதுடன் பிணைக்கப்பட்டுள்ளது:

(2) மாறுதலின் காலம். சட்டப்படியாக, பிரமாணமானது சிலுவையில் அறையப்பட்டிருந்தது (கொலோ. 2:14, 16) - இது பலி செலுத்தும் பிரமாணத்தையும் உள்ளடக்கியது. நடைமுறையில் தேவன், யூதத்துவத்திலிருந்து கிறிஸ்தவத்திற்கு மாறுகின்ற காலம் மற்றும் வாய்ப்பை யூதர்களுக்குக் கொடுத்தார்.[2] இவ்விதமாக, வேதவசனப் பகுதிகள் சில, இயேசு மரித்தபோது பிரமாணமானது நீக்கப்பட்டதைப் பேசுகின்ற (எடுத்துக் காட்டாக எபே. 2:14, 15) அதே வேளையில், மற்ற சில வசனப் பகுதிகள் பிரமாணமானது படிப்படியாகக் கடந்து சென்றதைப் பேசுகின்றன. எடுத்துக்காட்டாக, எபிரெயர் 8:13ல் முதலாம் உடன்படிக்கை பழமையானது என்று பேசப்படுகின்றது, பிறகு ‘‘பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபமாயிருக்கிறது’’ என்று அவ்வசனம் கூறுகின்றது (2 கொரி. 3:7-11ஐயும் காணவும்). மத்தேயு ஹென்றி அவர்கள், “சடங்காச்சாரமான பிரமாணமானது ... மரித்திருந்தது, ஆனால் அடக்கம் செய்யப்படவில்லை” என்று குறிப்பிட்டார். கடைசியில் தேவன் எப்பொழுது பிரமாணத்தை “அடக்கம்” செய்தார்? கி.பி. 70ல் தேவாலயத்தின் அழிவை தேவன் அனுமதித்தபோது அவர் மாறுதலின் கால முடிவை அடையாளப்படுத்தினார் என்பதைப் பெரும்பாலோர் ஒப்புக் கொள்ளுகின்றார்கள். இது உண்மையாய் இருக்குமென்றால், கி.பி. 57ல் பவுல் தேவாலயத்தினுள் சென்றபோது, யூதர்கள் மாறுதலின் காலத்திலேயே இருந்தார்கள். இந்தக் காரணியானது அடுத்து வரும் காரணிக்கு இணையானதாகும்:

(3) படிப்படியாகத் தரப்பட்ட வெளிப்படுத்துதல். நடபடிகள் பற்றிய நமது பாடத்தில், தேவன் தமது சித்தத்தை எல்லாம் ஒரே முறையில் வெளிப்படுத்தி விடாமல், மக்களால் அதைத் தன்மயமாக்கக் கூடிய அளவுக்கும், தேவையான அளவுக்குமே வெளிப்படுத்தினார் என்று நாம் கண்டிருக்கின்றோம். எடுத்துக்காட்டாக, பெந்தெகொஸ்தே நாளன்று

பேதுரு கூறிய வார்த்தைகளில் தேவனுடைய முழுமையான திட்டத்தில் புறஜாதிகளுக்கும் பங்குண்டு என்ற கருத்து உள்ளடங்கியிருந்தது (அப். 2:39), ஆனால் தேவன் பேதுருவுக்கு ஒரு விசேஷித்த தரிசனம் தரும் வகையில் (அப். 10) பேதுரு அதைப் புரிந்து கொண்டதில்லை. கலாத்தியருக்கும் ரோமருக்கும் நிருபங்களைப் பவுல் எழுதியிருந்தும் கூட, அந்த நிருபங்களில் பலிகள் செலுத்துதல் பற்றியிருந்த போதனைகளின் தர்க்க ரீதியான பயன்பாட்டைப் பவுல் புரிந்து கொண்டிருக்கவில்லை என்றும் கூட கருத்துக் கூறப்பட்டுள்ளது. தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்ட பின்வருவன போன்ற வார்த்தைகள் எழுதப்படுவதற்குப் பல வருடங்கள் ஆயின:[3] "சர்வாங்க தகன பலிகளும், பாவ நிவாரண பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர்," "இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால், இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே" (எபி. 10:6, 18). தேவனுடைய வெளிப்படுத்துதல் இப்பொழுது நிறைவாகியிருக்கின்றது (2 பேது. 1:3; யூதா 3), ஆனால் பவுல் தேவாலயத்தினுள் சென்றபொழுது அது நிறைவாகியிருந்ததில்லை.

பவுல் "சூழ்நிலைகளின் கீழ்" சரியானதைச் செய்தார் என்ற நிலைப்பாடு சரியானதாக இருக்கலாம்; மேலே அட்டவணைப் படுத்தப்பட்ட காரணிகள் யாவும் வேத வசனங்களில் காணப்படுகின்றன என்பது உறுதி. இருந்தபோதிலும், பவுல் பாவ நிவாரணத்திற்காகப் பலி செலுத்த விரும்பியபோது சரியானதையே செய்தார் என்று கூற நான் சிரமப்படுகின்றேன் - ஏனென்றால் இது இயேசு பாவ நிவராணத்திற்காக முழுமையான (பூரணமான) பலியைச் செலுத்திய பிறகு நடைபெற்றதாக உள்ளது. இந்த இரண்டாவது நிலைப்பாட்டைப் பற்றியிருக்கின்றவர்கள் இந்தச் சிரமமானது விசேஷித்த கவனத்திற்குரியது என்று உணர்ந்திருக்கின்றார்கள். இந்த சிரமத்தை அடையாளம் கண்டு கொண்டவர்களில் ஒருவரான ஆதம் கிளார்க் அவர்கள், பலிகளை, நாம் வரி செலுத்தும் செயலுடன் ஒப்பிடுகின்றார். ஏனென்றால், "நாட்டின் அமைச்சர்கள் இவைகளினாலேயே பராமரிக்கப்பட்டார்கள்." இன்னொருவர், இந்த பலிகளை நாம் நாட்டின் சட்டத்தை மீறும் பொழுது செலுத்தும் தண்டத் தொகைக்கு ஒப்பிடுகின்றார்.

*நசரேய விரதத்தின் பிரமாணத்தில் வாசிக்கப்படும் வழி முறையே எனது பிரச்சனையாகும்: விரதம் மேற்கொண்டவர் கொண்டு வரும் பறவைகளில் ஒன்று ''பாவ நிவாரணப் பலியாக'' அவனது "தீட்டை நிவிர்த்தி செய்து, ... பரிசுத்தப் படுத்துவற்காக'' (எண். 6:11) ஒப்புக் கொடுக்கப்பட்டது. மனிதர் தம் சக மனிதர்களுடன் கொண்டுள்ள உறவுகளில் சில வேளைகளில் ''ஒப்புரவாகுதல்'' என்ற வார்த்தையை நாம் பயன்படுத்துகின்றோம், ஆனால் எண்ணாகமம் 6ல் உள்ள இச்சொற்றொடர் யூதர்களுக்கு எதை அர்த்தப்படுத்தியது? நிச்சயமாகவே அவர்களின் சிந்தைகளில் இது அவர்களுடைய தேவனுடன் மனிதருக்கு உள்ள உறவையே குறித்தது. ஒருவேளை பவுல், பலிகள் செலுத்துதலானது தமது ஆத்தும இரட்சிப்புக்கென்று எதுவும் செய்வதில்லை என்று புரிந்து கொண்டிருக்கலாம், ஆனால் ஆசாரியர்கள் அதைப் புரிந்து கொண்டிருப்பார்களா? பலிகளுக்கான ஏற்பாடுகளைப் பவுல் செய்து கொண்டிருந்ததைக் கண்ட விசுவாசமற்ற யூதர்கள் அதைப்புரிந்து கொண்டிருப்பார்களா? பவுலின் செயல்பாடுகள் குறைந்தபட்சம் கேள்விக்குரியவைகளாயிருந்தன என்று எண்ணாமல் இருக்க என்னால் முடியவில்லை.*

### தகுதியுள்ள ஒரு "இல்லை"

*பவுல் செய்தவற்றிற்குச் சார்பாகப் பேச முடியாது, அவருடைய இக்கட்டான நிலை குறித்துப் பரிதாபப்படும் கணிசமான எண்ணிக்கையுள்ள - இவர்களின் நிலைப்பாடுபற்றி நான் ஆறுதல் அடைகின்றேன். இந்தக் குழுவினர், குறிப் பிட்டுள்ள சூழ்நிலைகள் பவுலின் செயல்பாட்டில் குறிப்பிடத் தக்க காரணிகளாக இருந்தன என்று நம்புகின்றார்கள், ஆனால் இரத்தப் பலி செலுத்துவதில் அவர் ஈடுபட்டதை இவர்கள் நியாயப்படுத்துவதில்லை.*

*இந்த குழுவில் உள்ள பெரும்பாலோர் ''பாவம்'' என்ற வார்த்தையைத் தவிர்த்து விடுகின்றார்கள். மாறாக, இவர்கள் பொதுவாக ''தவறு'' என்ற வார்த்தையைப் பயன்படுத்து கின்றார்கள். "தவறு" என்பது எவ்வளவு ஆபத்தானது என்பதில் கருத்து வேறுபாடு இருப்பினும், அந்தச் சொற்றொடரே விரும்பத்தக்கதாகக் காணப்படுகின்றது. நான் மிகவும் மதிக்கின்ற போதகரும் ஊழியருமான ஒருவர் சமீபத்தில்,*

*"பவுல் ஒரு தவறைச் செய்தார் என்று நான் போதிக்கின்றேன்"[4] என்று எழுதினார். முந்திய பாடத்தின் தொடக்கத்தில், நான் G. கேம்ப்பெல் அவர்களின் கூற்றை மேற்கோள் காட்டினேன், அவர், பவுல் "தமது ஊழியத்திலேயே மாபெரும் தவறொன்றை இந்த நிகழ்ச்சியில் செய்தார்" என்று கூறினார்.*

*வேதாகமப் பாத்திரங்களின் ஒவ்வொரு நடக்கையையும், மிகச் சிறந்ததைக் கூட நாம் நியாயப்படுத்தத் தேவைப்படுவதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். மூப்பர்கள் தவறக் கூடியவர்களாக இருந்தார்கள் - இருக்கின்றார்கள் மற்றும் ஏவப்பட்டிருந்த மனிதர்களும் கூட தவறு செய்தார்கள் (கலா. 2:11-14). பவுல் தம்மையும் ஒரு பாவியென்றும் (ரோமர் 3:23) முழுமையற்றவர் என்றும்[5] (பிலி. 3:12) குறிப்பிட்டார்.*

### தகுதியற்ற ஒரு "இல்லை!"

*ஒரு சிலர் - ஒருவேளை எல்லாவற்றிலும் மிகச் சிறிய குழுவினர் - பவுல் தவறு செய்தார் என்றும் அவர் செய்த செயலுக்கு எவ்விதத்திலும் முழுமையான குற்றவிலக்கக் காரணம் எதுவும் இல்லையென்றும் வலியுறுத்துகின்றார்கள். இந்தக் குழுவினர் சரியானவர்களாயிருக்கலாம், ஆனால் இந்த நிலைப்பாடானது மற்றவர்களின் செயல்பாட்டிற்கான சாதகமான கட்டமைப்பு என்ற அடிப்படை நோக்கத்தை மீறுவதாய் உள்ளது (1 கொரி. 13:7).*

## தேவனின் முடிவு கட்டும் வார்த்தை

*தேவன், பவுலின் செயலை எவ்விதம் கண்ணோக்கினார் என்பதை நமக்குக் கூறுவது தகுதியற்றது என்று தேவன் கண்ணோக்கியதால், பவுலின் செயல்பாடானது சரி - தவறு என்ற அளவு கோலில் எவ்விடத்தில் உள்ளது என்று உபதேசத்தின்படி பேசுவதில் நாம் தயக்கம் காட்ட வேண்டும். இருப்பினும், இன்றைய நாட்களில் பலிகள் செலுத்துவது பற்றி எழுப்பப்பட்ட இரண்டாவது கேள்வியைப் பற்றி தேவன் பேசியிருக்கின்றார், நாம் அதைக் கவனிக்க வேண்டும். பவுலோ அல்லது வேறு எவருமோ இன்றைய நாட்களில் இரத்தப்*

*பலிகளைச் செலுத்துவது சரியல்ல என்று தேவன் கூறியிருக்கின்றார்.*

## *திட்டவட்டமான ஒரு உறுதிப்பாடு*

*பவுல் தேவாலயத்தில் செலவிட்ட ஒரு வாரத்திற்குச் சற்றுக்காலம் பிற்பாடு, தேவன் எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்திற்குக் காரணரானார்[6] - இது பவுலினாலோ அல்லது அவரது நண்பர்களில் ஒருவராலோ எழுதப்பட்டிருக்கலாம். இந்த நிருபம் எபிரெயருக்கு (அதாவது யூதர்களுக்கு) எழுதப் பட்டதாகும். அதாவது யூதர்களில் இருந்து கிறிஸ்தவரா னவர்கள் தங்கள் பழைய வழிகளுக்குத் திரும்பும்படி சோதிக்கப்பட்டார்கள். கிறிஸ்தவத்திலுள்ள ஒவ்வொன்றும், மேன்மையானது, எனவே அவர்கள் யூதத்துவத்திற்குத் திரும்பு வது என்பது மதியீனமானது - அழிவைத் தருவதாகவும் கூட இருக்கும் - என்று அதன் எழுத்தாளர் வாதிட்டார். டொனால்டு பார்ன்ஹவுஸ் அவர்கள் இதை, “எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபமானது எபிரெயர்கள் எபிரெயர்களாய் இருப்பதை நிறுத்தும்படிக் கூறுவதற்காக எழுதப்பட்டது”[7] என்று கூறினார்!*

*கவனத்தின் கீழ் உள்ள கேள்வியைப் பற்றிய திறவுகோல் அதிகாரங்களாக உள்ளவை எபிரெயர் 7 முதல் 10 வரை இருக்கின்றன. அதிகாரங்கள் 7 மற்றும் 8 ஆகியவற்றில், ஆரோனின் ஆசாரித்துவம் நீக்கப்பட்டதைப் பற்றி எழுத்தாளர் குறிப் பிட்டார். 9 மற்றும் 10ஆம் அதிகாரங்களில், கிறிஸ்துவின் பலியானது வாயற்ற மிருகங்களின் பலிகளை மேற்கொண்டு விட்டதாக அவர் வலியுறுத்தினார். இந்த அதிகாரங்களைக் கவனமாகப் படிக்க நீங்கள் விரும்புவீர்கள். இந்த வேளையில், பலிகள் செலுத்துவதைப் பற்றிய ஒரு பகுதியை இவ்விடத்தில் காண்போம்:*

> *அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவை களுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே. ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்ப வில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்; சர்வாங்க தகனபலிகளும், பாவ நிவாரண பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர். அப்பொழுது நான்:*

*தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார். நியாயப் பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டு வருகிற பலிகளைக் குறித்து மேற் சொல்லியபடி: பலியையும், காணிக்கையை யும், சர்வாங்க தகனபலிகளையும் பாவநிவாரண பலிகளையும் நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்ன பின்பு: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார். இயேசு கிறிஸ்துவினு டைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்தி செய்யக் கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்தி வருகிறவனாயும் நிற்பான். இவரோ, பாவங் களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார். ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தி யிருக்கிறார். இதைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சிசொல்லுகிறார்; எப்படியெனில்: அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங் களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்தபின்பு, அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார். இவைகள் மன்னிக்கப் பட்டதுண்டானால், இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே (எபி. 10:4-18).*

*எபிரெயருக்கு எழுதின நிருபத்தின் போதனைகள் கிறிஸ்தவர்களின் மீது செயல் விளைவை ஏற்படுத்தியிருந்தது உறுதியாகும், ஏனெனில், பர்ட்டன் காஃப்மேன் அவர்கள்*

*குறிப்பிட்டபடி, "தேவாலயத்தில் கூடி வந்த கும்பலில் இருந்து, பவுல் லீசியாவால் மீட்கப்பட்டதில் இருந்து, யூதர்களின் தேவாலயத்திற்குள் எந்த ஒரு கிறிஸ்தவரும் சென்றதற்கான பதிவேடு எதுவும் இல்லை."*[8]

**தீர்மானமான ஒரு செயல்பாடு**

*எவரொருவரும் செய்தியைப் பெற்றிருந்ததில்லையென்ற பட்சத்தில், ஒரு சில வருடங்களுக்குப் பிறகு, தேவாலாயத்தை அழியச் செய்யும்படி தேவன் அனுமதித்தபோது, எல்லாக் காலத்திற்குமாக அவர் இந்த விஷயத்தைத் தீர்த்து வைத்து விட்டார். காஃப்மேன் அவர்கள், "[தேவாலாயத்தின்] வடிவமைப்புகள் மற்றும் பலிகள் ஆகியவற்றின் மீதுள்ள பற்றானது, அவைகளில் இருந்து யூதர்களைப் பிரிக்க முடியாதபடிக்கு அவர்கள் எல்லார் மீதும் அவ்வளவு வலிமையைச் செலுத்தும் என்பதைக் கர்த்தர் அறிந்தார், எனவே தேவனே அவைகளை யூதர்களிடமிருந்து பிரித்து எறிந்தார்'' என்று கருத்துத் தெரிவித்தார். தேவாலாயத்தின் அழிவைக் குறித்து ஆதம் கிளார்க் அவர்கள், "தேவன் தமது அருளிரக்கத்தின் போக்கினால், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கடைப் பிடிப்பது சாத்தியமற்றதாயிருந்தது கண்டு, அதை நீக்கிப் போட்டார்" என்று கூறினார்.*

*கி.பி. 70ல் தேவாலயத்தின் அழிவும், பலிகள் ஒழிக்கப் பட்டதும் நீண்ட காலத்திற்கு முன்பாகவே முன்னுரைக்கப் பட்டிருந்தது. பரிசுத்தஸ்தலமானது மிதிக்கப்படும் என்றும் (தானி. 8:13), நகரமும் பரிசுத்த இடமும் அழிக்கப்படும் என்றும் (தானி. 9:26), பலிகளும் காணிக்கைகளும் நிறுத்தப்படும் என்றும் (தானி. 9:27), "அன்றாட பலி" "நீக்கப்படும்" என்றும் (தானி. 12:11) தானியேல் கூறியிருந்தார்.*[9] *அந்தத் தீர்க்கதரிசி ''அழித்துப் போடுதல்'' மற்றும் ''அருவருப்புகள்'' போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துவதன் மூலம் பயங்கரமான துன்பம் வரப் போவதைப் பற்றிப் பேசியிருந்தார் (9:26, 27). அறுநூறு ஆண்டுகளுக்குப் பின்னதாக, இயேசு தேவாலயத்தை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தபோது, "இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப் பட்டுப்போகும்" (மத். 24:2ஆ) என்று கூறித் தமது சீஷர்களைத் திகைப்படையச் செய்தார். இந்தக் கூற்றைப் பற்றிக் கேட்கப்*

*பட்டபோது, அவர் தானியேலின் தீர்க்கதரிசனத்தைக் குறிப் பிட்டு, "பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே ... நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்திலே நிற்கக் காணும் போது" (மத். 24:15; வசனம் 21ஐக் கவனிக்கவும்) என்றும் அவர் கூறினார்.[10] ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, ரோமப்படையானது எருசலேமை - தேவாலயம் உட்பட - தரைமட்டமாக்கியது. அது நடைபெற்ற போது, யூதத்துவத்தில் பலி கொடுக்கும் அமைப்பானது "இறந்து போன ஒரு விஷயம் ஆயிற்று."[11]*

*இன்றைய நாட்களில், யூதராயினும் அல்லது புறஜாதியா ராயினும், நாம் இப்பூமியில் உள்ள எந்த ஒரு ஆசாரியனையும் அல்ல, ஆனால் "தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியரையே" (எபி. 4:14) நாம் அணுக வேண்டும், அவர், "பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார்" (எபி. 8:1). காளைகள் மற்றும் வெள்ளாட்டுகடா போன்றவற்றை நாம் பலி செலுத்தக் கூடாது (10:4), ஆனால் அதற்கு மாறாக, இயேசுவின் பூரணமான பலியை நமக்குக் கொடுத்தமைக்காக (எபி. 9:26) "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்கு" செலுத்த வேண்டும் (எபி. 13:15)!*

## *முடிவுரை*

*தேவாலயத்தில் பலி செலுத்துதலில் பவுல் பங்கேற்றது பற்றிய இரண்டு பாடங்களுக்குப் பிறகு, இன்னமும் நாம், ஆதம் கிளார்க்குடன் இணைந்து, "இந்த மாறுதலில் நாம் முழுமையாகப் புரிந்து கொள்ளாத சில விஷயங்கள் இருப்பதாகக் காணப்படுகின்றது" என்று கூறுவதற்குச் சாய்கின்றோம். இருப்பினும் பின்வரும் ஒரு முடிவு தெளிவான தாகும்: பழைய வழிகள் ஒழிவது மிகவும் கடினம். எப்பொழு தும் இது இவ்விதமாகவே இருக்கின்றது, எருசலேமில் இருந்த மூப்பர்கள் இந்தச் சத்தியத்துடன் போராடினார்கள். பவுல் இதனுடன் போராடினார். நீங்களும் நானும் இதனுடன் போராடுகின்றோம். சில விஷயங்கள் பழையனவா அல்லது புதியனவா என்பது மிக முக்கியமாய்க் கவனித்தற்குரியதல்ல*

*என்பதை எப்பொழுதுமே நமது சிந்தையில் கொள்ள வேண்டும். அது சரியானதா தவறானதா - அதை முடிவு செய்வது தேவனுடைய வார்த்தையே என்பதை நாம் நமது கவனத்தில் முக்கியமாய்க் காத்துக் கொள்ள வேண்டும்! வசனத்திற்கு உங்களுடைய உறுதிப்பாட்டைப் புதுப்பித்துக் கொள்வதற்கு இதுவே நல்ல வேளையாகும்!*

---

*குறிப்புகள்*

*[1]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் "கிறிஸ்தவரும் அரசாங்கமும்" என்ற பாடத்தைக் காணவும். [2]யூதர்களுக்கு இந்தக் காருண்யத்தைக் காட்டுவதற்குத் தேவன் "கடன் பட்டிருந்ததில்லை"; இவ்விதமாக நான், ஒரு எழுத்தாளர் பயன்படுத்திய "கிருபையின் காலம்" என்ற சொற்றொடரை விரும்புகின்றேன். [3]எபிரெயருக்கு எப்பொழுது நிருபம் எழுதப்பட்டதென்று நாம் மிகச் சரியாக அறிவதில்லை. ஆசாரியர்கள் பலி செலுத்துவதைப் பற்றி அது பேசுவதால் (10:11), அநேகமாக அது கி.பி. 70ல் தேவாலயம் அழிக்கப்படுவதற்கு முன்பு எழுதப்பட்டிருக்க வேண்டும். கி.பி. 57ல் பவுல் எருசலேமில் கைது செய்யப்பட்டுச் சில ஆண்டுகளுக்குப் பின்பு அது எழுதப்பட்டிருக்கலாம் என்று எண்ணுவது ஓரளவு பாதுகாப்பானது.* [4]Roy H. Lanier, Jr., personal letter, 7 December, 1995. *[5]தவறு செய்ததைப் பவுல் ஒப்புக் கொண்டதற்கான எடுத்துக்காட்டை அப். 23:5ல் காணவும். [6]மேலுள்ள அடிக்குறிப்பு எண் 3ஐக் காணவும்.* [7]Quoted in Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 490. [8]James Burton Coffman, *Commentary on Acts* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1976), 8. *[9]தானியேல் புத்தகத்தில் உள்ளவற்றை விளக்க முயற்சிப்பதென்பது இந்தப் பணிக்கு (இப்புத்தகத்தின் பணிக்கு) அப்பாற்பட்டதாகும். இருப்பினும், மேற்கோள் காட்டப்பட்ட வார்த்தைகள் யாவும் கி.பி. 70ல் நடந்த எருசலேமின் அழிவைக் குறிப்பிடுவதாகக் கல்வியாளர்களில் பெரும்பாலோர் ஒப்புக் கொள்கின்றனர். [10]வசனம் 3ல் ஒரு கேள்வியைக் கேட்டதாகச் சீஷர்கள் நினைத்தார்கள் (ஏனெனில் எருசலேம் தேவாலயத்தின் அழிவானது உலக முடிவில் தான் நடக்கும் என்று அவர்கள் யூகித்தார்கள்). உண்மையில் அவர்கள் எருசலேம் தேவாலயத்தின் அழிவைப் பற்றியும் மற்றும் உலகத்தின் முடிவைப் பற்றியும் கூடக் கேட்டனர். இவ்விதமாக, அவ்வதிகாரத்தின் முதல் பகுதியானது அடிப்படையாக, எருசலேமின் அழிவை பற்றியதாக உள்ளது. அதன் கடைசிப் பகுதியானது அடிப்படையாக உலகத்தின் முடிவைப் பற்றியதாக உள்ளது. மத்தேயு 24ம் அதிகாரமானது கிறிஸ்துவின் வாழ்க்கை பற்றி வெளியாகும் இதழில் கலந்துரையாடப்படும்.*

[11]Richard Oster, *The Acts of the Apostles,* The Living Word Commentary Series, Part 2 (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 124. *யூதர்கள் தங்கள் ஜெப ஆலயங்களில் கிறிஸ்தவ யூதர்களை அனுமதிப்பது பற்றிய விஷயத்தைப் பின்னாளில் அவர்களே முடிவு செய்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத் தக்கது; முதல் நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டுகளில் அவர்கள், "நசரேயர்களும், தேவ விரோதக் கொள்கைக்*

*காரர்களும் உடனடியாக அழிந்து, ஜீவ புஸ்தகத்திலிருந்து அவர்கள் பெயர்கள் நீக்கப்படக் கடவது" என்ற வார்த்தைகளைத் தங்களின் ஜெபத்தில் சேர்த்துக் கொண்டார்கள்* (quoted in F. F. Bruce, *The Book of Acts*, rev. ed. [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988], 428).